10 பாடம்

# போகவிடாதே!

***ஒய்வுநாள் பள்ளியில் சுபா மட்டும் தனியே உட்கார்ந்திருந்தாள். மற்ற பிள்ளைகள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவளுக்குப் பழக்கமானவர்கள் எவருமே இல்லை. யாரும் அவளுடன் பேசவில்லை. தூரதேசத்திலிருந்து மாறுதலாகி வந்திருந்தாள். தனிமை அவளுக்கு வேதனையைத் தந்தது. யாரும் அவளுடன் பேசாதது ஏன்?***

அண்ணன்களே தன்னை அடிமையாக விற்றதும் யாவரையும் பிரிந்து தூரத்தில் இருந்ததும் யோசேப்புக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஆனாலும், தன் அப்பா தனக்குச் சொல்லிக்கொடுத்த தேவனின் வாக்குறுதிகள் மனதிற்கு அமைதியையும் நம்பிக்கையையும் ஆறுதலையும் தந்தன. முற்றிலும் தேவனுக்கே தன்னை அர்ப்பணிக்கத் தீர்மானித்ததால், தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

“தேவன் அவனோடிருந்தார்” என்கிறது வேதாகமம். போத்திபார் என்பவனிடம் அவன் விற்கப்பட்டிருந்தான். யோசேப்புடன் தேவன் இருந்ததால், போத்திபாரும் ஆசீர்வாதம் பெற்றான்.

இதை அறிந்த போத்திபார் தனது வீட்டின் அனைத்துக் காரியங்களையும் யோசேப்பிடம் ஒப்படைத்தான். தேவனிடத்தில் ஆசீர்வாதம் பெற்றிருந்த அவனை யாவரும் விரும்பினர்.

போத்திபாருடைய மனைவி யோசேப்பின் அழகில் மயங்கினாள். யோசேப்பைத் தப்புசெய்யத் தூண்டினாள். யோசேப்பு சம்மதிக்கவில்லை.

யோசேப்பு பாவம் செய்யுமாறு அவள் தினம் தினம் வற்புறுத்தியும் அவன் சம்மதிக்கவில்லை. எனவே யோசேப்பின்மேல் அவளுக்குக் கோபம் வந்தது. தன்னுடைய சொற்படி



**மனன வசனம்**

**ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.**

**வெளி3:11.**

யோசேப்பு தப்புச் செய்யாவிட்டால், அவன்மேல் ஏதேனும் ஒரு பழியைச் சுமத்தி அவனைத் துன்பத்திற்குள்ளாக்கத் திட்டமிட்டாள்.

யோசேப்பு ஒருநாள் ஒரு வேலையினிமித்தம் போத்திபாருடைய வீட்டிற்குள் சென்றான். அப்போது வீட்டில் அவனுடைய மனைவியைத் தவிர வேறு யாரும் இல்லை; மற்ற வேலைக்காரர்கள் எல்லாரும் வெளியே வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

போத்திபாரின் மனைவி அவனைத் தப்புச்செய்ய வற்புறுத்தினாள். அவனோ, "தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்படுவது எப்படி?" என்று அவளிடமே கேட்டான். அவள் அவனது மேலாடையைப் பிடித்தாள்.



அவளிடம் இருந்து எப்படியேனும் தப்பிக்க நினைத்தான் யோசேப்பு; தனது மேலாடையினை அப்படியே விட்டுவிட்டு வெளியே ஓடினான்.

அவளோ, "உதவி! என்று கத்தினாள்; மற்ற வேலைக்காரர்கள் உள்ளே ஓடிவந்தார்கள். "யோசேப்பு என்னிடம் தவறுசெய்ய முயற்சிசெய்தான்" என்றாள். தன் கணவன் போத்திபார் வந்ததும், யோசேப்பின் மேலங்கியைக் காண்பித்தாள். யோசேப்பு தன்னிடம் தவறு செய்யமுயற்சித்தபோது, தான் கத்தியதால் அவன் பயந்து தனது மேலாடையை விட்டுவிட்டான் என்றும், தான் அவனுடைய மேலாடையைப் பத்திரமாக வைத்திருப்பதாகவும் கூறி, அதை போத்திபாரின் மனைவி, போத்திபாரிடத்தில் கொடுத்தாள். எனவே, போத்திபார் யோசேப்பை சிறையிலடைத்தான்.

## செய்தி

**தேவனுக்காக நான் வாழும்படி என்னுடைய ஓய்வுநாள் பள்ளி என்னை ஆயத்தப்படுத்துகிறது.**

யோசேப்போ தேவனை மறவாமல், உறுதியாகப்பற்றிக்கொண்டான். தேவன் தன்னுடனேயே இருக்கிறார் என்று உறுதியாக நம்பினான்.

தேவனும் யோசேப்புடன் இருந்தார். அவனை ஆசீர் வதித்தார். அந்த சிறைச்சாலையிலே தேவனுடைய கிருபை யோசேப்பின்மேல் பரிபூரணமாய் இருந்தது. தேவன் தன்னோடு இருக்கும்போது அவருக்காக வாழ்வது எளிது என்பதைத் தன் வீட்டில் இருக்கும்போதே யோசேப்பு கற்றிருந்தான். அப்படியென்றால், சாத்தானை விரட்டுவது மிகமிக எளிது.

என் செல்லமே, தேவனுடைய அன்பு உன்னைப் பெலவானாக்கும்; மகிழ்ச்சியுள்ளவனாக்கும்.

***செய்முறை:*** **தேவனுக்குப் பிரியமாக வாழ்வது எப்படி என்பதை நாம் கற்றுக்கொள்ள யோசேப்பின் வாழ்க்கை நமக்கு உதவுகிறது. தேவனுடைய அன்பு நம்மை எப்படிப்பட்டவர்களாக்கும் என்பதை நாம் கண்டுகொள்ளும்படிக்கு இங்கே இரு படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. படங்களையும் இன்றைய பாடத்தின் கடைசிப் பகுதியையும் நன்கு படித்து, கீழேயுள்ள கோட்டில் பதிலை எழுது.**

**பதிர் 10**



______________________



______________________